முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சாக்கிய நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

09.12.2018, ஞாயிற்றுக்கிழமை

1. **கருணாமூர்த்தியே ஞான தேசிகா**
**கலிமாயை மக்களை வருத்தா**
**வருமுலகில் அகற்றி காக்கவே**
**வள்ளலாய் அவதாரம் புரிந்த அரங்கா**
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் **விளம்பி தேளின் திங்கள்**
**வரங்களென மூவேழீர் திகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 23ம் நாள் 09.12.2018, ஞாயிற்றுக்கிழமை)**
**வழங்கிடுவேன் ஒளி சூட்சும நூலை**
3. **நூலை சாக்கிய நாயனார் யானும்**
நிலவுலக நலம் கருதி உரைப்பேன்
காலமதை வென்று வந்த
கலியுக ஞானியே அரங்கா
4. அரங்கனே உன் சீடர்களென
அகிலமெங்கும் அடையாளம் கண்டவர்களுக்கு
வரங்கள் தந்து முருகப்பெருமான்
வாழும் காலமே அருளி காக்க
5. காக்கும் கடவுள் அவதாரமான
கலிமீட்பின் அவதார ஆசானை
ஆக்கமுடன் மக்கள் அணுகியே
அனுதினம் நாமசெபதபம் போற்றி
6. போற்றி சித்தர் பூசைகளை
பேருலகில் மக்கள் செய்து வர
ஆற்றல்பட இந்த கலியுகம்
அழிவில்லா மீட்பு காண்கும்
7. காண்குமே தலைவன் முருகன்
கண்ணியமான தலைமைகளும்
ஆன்மீக அடியவர்கள் சூழவே
ஆளுமையாக மாறி பரவும்
8. பரவி எல்லா திக்கிலும்
பாலதண்டாயுதன் வழிபாட்டுடன்
பரோபகார சிந்தை பரவி
பரிபக்குவம் உலகோர் அடைய
9. அடைய ஞான ஆட்சிகள் பெருகி
அணுகிடும் ஞானிகள் வெளிவர
தடையற ஞானயுக மாற்றம்
தவராஜன் மூலம் நடந்தேறும்
10. தேற்றம் தரும் ஞான குருவே
தெய்வீக சக்தி வெளிப்படுத்தி
மாற்றம் செய்யும் அரங்கனே
மகானுன் வழி வர உலகம் மாறும்

11. மாறிட முழுமதி காலம் தோறும்
மகான் வாழும் பிரணவக்குடிலுக்கு
தேறிட உலகோர் தொடர்ந்து வர
தெரிவிப்பேன் உலக மாற்றம் காண்கும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் சாக்கிய நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

கருணையே வடிவான கருணாமூர்த்தியே ஞானமே வடிவான ஞானதேசிகா கலியுகத்தின் மாமாயை உலக மக்களை வருத்தாமல் மக்களை பாதுகாத்து வருமுலகில் கலியுக மாமாயை அகற்றிடவே வள்ளல் ஞானியாய் அவதாரமாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதம்மிக்க உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 23ம் நாள் 09.12.2018, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே சாக்கிய நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சாக்கிய நாயனார்.

காலத்தை வென்றிட்ட கலியுக மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே உமது சீடர்கள் என்றே உலகினில் அடையாளம் கொண்டவர்களுக்கு ஞானத்தலைவன் முருகப்பெருமான் அவர்கள் வாழும் காலத்திலேயே வரங்களை தந்து அருள் செய்து காக்கின்றார்.

கடவுள் முருகப்பெருமானின் அவதாரமான ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை கலிமீட்பின் அவதார ஆசானை ஆக்கமும் ஊக்கமும் கொண்டு உலக மக்கள் பயபக்தியுடன் பணிந்து அணுகி வணங்கி தினம்தினம் நாமஜெபங்களை செய்து ஞானிகள் திருவடிகளை போற்றி வணங்கி வருவதுடன் தவறாமல் சித்தர் பூஜைகளை செய்து வரவர, ஆற்றல் மிகுந்து இந்த கலியுகமும் அழிவினில் இருந்து மீண்டு பாதுகாப்பை பெற்றிடும்.

இந்த கலியுகம் மீண்டு ஞானத்தலைவன் முருகப்பெருமான் தலைமையில் கண்ணியம்மிக்க தலைமைகள் உருவாகி ஆன்மீக அடியவர்கள் சூழ ஞானஆட்சியாக மாறி உலகமெங்கும் ஞானஆட்சி பரவிடும்.

ஞான ஆட்சி உலகின் எல்லா திசைகளிலும் பரவி முருகப்பெருமானின் வழிபாட்டுடன் மக்களிடம் பரோபகாரமாகிய ஜீவதயவும் பரவி உலக மக்கள் பரிபக்குவத்தினை அடைவார்கள். உலக மக்கள் பரிபக்குவம் அடைந்திட உலகினில் ஞானஆட்சி பல தேசங்களில் உருவாகி ஞானிகள் எல்லாம் உலகினில் வெளிப்படும் நிலை உண்டாகி ஞானிகளின் அருளால் செயல்பாடுகளால் தடையேதும் இன்றி விரைந்து ஞானயுக மாற்றம் தவராசன் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலம் விரைந்து நடந்திடும்.

உலக மக்களுக்கு கடைத்தேற்றம் தருகின்ற ஞானகுருவே தெய்வீக சக்திகளை வெளிப்படுத்தி மாற்றங்கள் செய்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனே மகானே அரங்கா உமது வழிக்கு உமது தூயநெறிக் கொள்கையை ஏற்று உமது ஞானவழிக்கு உலகோர் வந்திட உலகம் மாற்றம் அடையும்.

உலக நலன் கருதி ஆறுமுக அரங்கன் மாதந்தோறும் பௌர்ணமி தினத்தினில் நடத்துகின்ற ஞானிகள் பூஜையாம் சித்தர் வழிபாட்டிற்கு உலகோர் அரங்கன் வாழும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை நாடி வந்து பூஜை கலந்து ஞானிகளின் ஆசி பெற்று ஞானபலம் பெற்றிட உலகம் தேற்றம் அடைந்து உலகமாற்றம் உருவாகிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சாக்கியநாயனார்.

–சுபம்–